அசல் வழக்கு எண்.58/2020 வா.சா.4 கன்னியப்பன் த/பெ கோவிந்தராஜ்

**20.09.2024 - 4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதி, பிரதிவாதி எனக்கு தெரியும். வழக்கு சொத்து அமைந்துள்ள ஆகாரம் கிராமத்தில் தான் நான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தினை தற்போது தட்சிணாமூர்த்தி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதியான தட்சிணாமூர்த்தியின் வழக்கு சொத்தினை 4ம் பிரதிவாதியிடமிருந்து தான் கிரயம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2., வழக்கு சொத்தினை 5ம் பிரதிவாதி வாங்கியது எனக்கும் நீலகண்டனுக்கும் தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றும் நான் ஆகாரம் கிராமத்தில் வசிக்கவில்லை என்றும் சென்னையில் தான் வசித்து வருகிறேன் என்றும் அதனால் வழக்கு சொத்து பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் வசித்து வருவது சென்னை என்றாலும் எனது பூர்வீகம் ஆகாரம் கிராமம் தான் அதனால் எனக்கு வழக்கு சொத்து பற்றிய விவரங்கள் தெரியும்.

3. வாதி நீலகண்டன் தனது பெற்றோரை சரியாக கவனிக்காத காரணத்தினால் 5ம் பிரதிவாதி தட்சிணாமூர்த்தி தான் வாதியின் பெற்றோரை பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் பூபதியின் சுய சம்பாத்தியத்தில் வாங்கப்பட்ட சொத்து என்றும் அந்த சொத்தினை பூபதி 4ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்தார் என்றும் 4ம் பிரதிவாதியிடமிருந்து 5ம் பிரதிவாதி தனது சுய சம்பாத்தியத்தில் 2007ம் ஆண்டில் கிரயம் பெற்று 17 வருடங்களாக அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. பூபதி ஆதிமூலத்திடமிருந்து கிரயம் வாங்கிய சமயத்தில் வாதி நீலகண்டனும் ஒன்றாக தான் இருந்தார்.

4. வழக்கு சொத்தில் வாதி நீலகண்டனுக்கு எந்த பாக உரிமையும் இல்லை என்றும் வாதி அழைத்ததன் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன்என்று சொன்னால் சரியல்ல. வாதி பூபதியின் மகன் என்பதால் சொத்தில் அவருக்கு உரிமை உள்ளது. காதல் திருமணம்செய்து கொண்டு தனியாக சென்று விட்டதால் அந்த சமயத்தில் வழக்கு சொத்து 4ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்டு அதன் பின்னர் 4ம் பிரதிவாதியிடமிருந்து 5ம்பிரதிவாதி கிரயம் வாங்கியது தவறாகும்.

5. நான் எங்கள் ஊரில் நாட்டாமை என்பதால் எனக்கும் 5ம் பிரதிவாதிக்கும் உள்ள விரோதத்தின் காரணமாக அவரை பழி வாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவருக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.